சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 42/2021

பெயர் திரு. முருகன் நாள். 21.03.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வழக்குச் சொத்து எங்களுக்கு உரிமையான சொத்து அதனை தவறுதலாக பட்டா மாற்றம் செய்ததை எதிர்த்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்து செய்யூர் கிராமம் D மற்றும் E வட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கை புல எண்.715/6 டி 15 சென்ட்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கை புல எண்.715/6 ஏக்கு வழக்கு தாக்கல் செய்திருந்தால் தவறு என்று சொன்னால் சரிதான். தற்பொழுது சாட்சி அந்த புல எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறார். ஆதியில் புல எண். 715/6 ன் மொத்த விஸ்தீரணம் 8 சென்ட் என்று சொன்னால் சரிதான். என் தாத்தா பெயர் கிருஷ்ணன் என்று சொன்னால் சரிதான். என் பாட்டி பெயர் பாக்கியம் என்று சொன்னால் சரிதான். கிருஷ்ணன் மற்றும் பாக்கியத்திற்கு தேவராயன் மற்றும் சுப்புராயன் ஆகியோர் பிள்ளைகள் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் பெயர் தேவராயன் என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் உண்ணாமலை, அம்பிகா மற்றும் முனுசாமி என்று சொன்னால் சரிதான். முனுசாமி இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். முனுசாமிக்கு முத்துலட்சுமி மற்றும் அனிதா வாரிசுகள் என்று சொன்னால் சரிதான்.

2) என் தகப்பனார் உடன் பிறந்தவரின் பெயர் சுப்புராயனின் மனைவி தனபாக்கியம் என்று சொன்னால் சரிதான். தனபாக்கியத்திற்கு துரைசாமி மற்றும் வீரப்பன் ஆகியோர் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். புல எண். 715/6 என்பது புல எண். 715/6 ஏ முதல் 715/6 டி வரை உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்பொழுது நான் வழக்கு தாக்கல் செய்திருப்பது 715/6 ஏ என்றாலும் அதன் விஸ்தீரணம் 15 சென்றால் சரிதான். 715/6 பி, மற்றும் 715/6 சி

ஆகியவற்றின் விஸ்தீரணம் தலா 2 ½ சென்ட் என்றால் சரிதான். புல எண். 715/6 டி –யின் மொத்த விஸ்தீரணம் 8 சென்ட் என்றால் சரிதான். புல எண். 715/6 என்பது யு.டி.ஆரில் உட்பிரிவு செய்யப்பட்டது. வழக்கு புல எண். 715/6 ஏ – 1 முதல் 6 பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். ஆனால் தவறுதலாக உள்ளது. அதன் பட்டா எண்.2763 என்று சொன்னால் சரிதான்.

3) புல எண் 715/6 பி உள்ள 5 சென்ட் இடத்தை 7 முதல் 9 வாதிகள் 2ம் பிரதிவாதி குமாருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான். அந்த விற்பனைக்கு பிறகு அந்த சொத்தின் பட்டா குமார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். புல எண் 715/6 சி 2 ½ சென்ட் என் தகப்பனார் தேவராயன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். புல எண் 715/6டி– யில் உள்ள விஸ்தீரணத்தை செல்லன், ஜானகி, ரத்தினம் மற்றும் பன்னீர் செல்வம் ஆகியோர் சேர்ந்து வேலு என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். அந்த கிரயத்தின்படி இன்றைய தேதியில் அந்த சொத்தின் பட்டா வேலு பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் பட்டா எண். 2293 என்று சொன்னால் சரிதான். புல எண் 715/6 சி யைத் தவிர்த்து வேறு சொத்துகப்களுக்கு தேவராயன் பெரயில் பட்டா இல்லை என்ற சொன்னால் சரிதான். புல எண். 715/6 பிக்காக பட்டா என் சித்தப்பா வகையறா பெயரில் தான் பட்டா உள்ளது என்றாலும், அதனைத் தவிர்த்து வேறு சொதுக்களுக்கு அவர்களது பெயரில் பட்டா இல்லை என்று சொன்னால் சரிதான். புல எண். 715/6 ஏ அல்லது 6 டி சொத்துக்களை நானோ, என் வகையறாவோ அனுபவம் செய்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4) நான் சுமார் 15 வருடங்களுக்கு முன்பிருந்து மொத்த சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறேன். 15 வருடங்களாக சொத்தை அனுபவம் செய்து வருவதற்கு என் பெயரிலோ அல்லது எங்கள் வகையறா பெயரிலோ வருவாய் ஆவணங்கள் மாறவில்லை. என் பாட்டி பெயரில்தான் உள்ளது. நான் தாக்கல்

செய்துள்ள வா.த.சா.ஆ.3 அ பதிவேடு 1962ம் ஆண்டிற்கானது என்றால் சரிதான். அதன் பட்டா பாக்கியம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதன்பின்பு உட்பிரிவு செய்யப்பட்டபொழுது அந்த புல எண் தனித்தனியே உட்பிரிவு செய்யப்பட்டு அவரவர் பெயரில் பட்டா வந்துவிட்டது என்றால் சரிதான். புல எண். 715/6 1986ல் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பேரில் தான் புல எண்.715/6 என்பது 6 ஏ முதல் 6 டி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பு புல எண். 715/6 ஏ பிரதிவாதிகளின் தகப்பனார் எல்லப்பன் பெயரில் மாற்றப்பட்டு விட்டது என்று சொன்னால் சரிதான். அதன் பிறகு நானும், என் சித்தப்பா வகையறாவும் புல எண்.6 பி மற்றும் 6 சி மட்டும் அனுபவம் செய்து வந்தோம் என்றால் மொத்த சொத்தையும் நாங்கள் தான் அனுபவம் செய்து வந்தோம்.

5) உட்பிரிவு செய்யப்பட்டது தவறு என்று வட்டாட்சியரிடம் 1990ம் ஆண்டு மனு அளித்துள்ளோம். அந்த மனுவை துரைசாமி மற்றும் தேவராயன் அளித்தார்கள். துரைசாமி என்பவர் என் சித்தப்பாவின் மகன் என்று சொன்னால் சரிதான். 7 முதல் 9 வாதிகள் புல எண். 715/ 6 பி யை 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த கிரய ஆவணத்தில் எல்லப்பன் நிலத்திற்கு கிழக்கே என்று குறிப்பிட்டுள்ளனர் என்றால் சரியல்ல. அந்த எல்லப்பன் நிலம் என்பது புல எண். 715/6 ஏ என்றால் சரியல்ல. புல எண். 715/6 பிக்கு கிழக்கே புல எண். 715/6 பி தான் உள்ளது என்றால் அவ்வாறுதான் இருக்கும். 7 முதல் 9 வாதிகள் 2ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுக்கும்பொழுது கிழக்கே உள்ள சொத்து எல்லப்பனுக்கு உரிமையனாது என்று ஒப்புக் கொண்டு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 1990ம் ஆண்டு வட்டாட்சியரிடம் மனு அளித்ததில் விசாரணை நடைபெற்றது. அதன் பேரில் வட்டாட்சியர் உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை. சுமார் 30 ஆண்டுகளாக வழக்குச் சொத்தின் பட்டா பிரதிவாதியின் தகப்பனார் எல்லப்பன் பெயரிலும், அதன் பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரிலும் உள்ளது என்றால் சரியல்ல.

6) வா.த.சா.ஆ.1 பட்டா புத்தகத்திற்கு பிறகு பாக்கியம் பெயரில் வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. 1962 –ற்கு பிறகு 1985 க்கு முன்பு பாக்கியம் பெயரில் என்னென்ன ஆவணங்கள் உள்ளன என்றால் பட்டா மற்றும் எஸ்.எல்.ஆர் உள்ளது. கணினி பட்டா வந்த பிறகு மொத்த விஸ்தீரணமான 28 சென்ட்டிற்கு பாக்கியம் பெயரில் பட்டா இல்லை என்று சொன்னால் சரியல்ல. புல எண். 715/6 டி விற்ற நபர்கள் மீது நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். இன்றைய தேதி வரை புல எண். 715/6 டி எனபதை வேலுதான் அனுபவம் செய்து வருகிறார். உண்மையில் புல எண். 715/6 ஏ மற்றும் 6 டியை அனுபவம் செய்திருந்தால் வட்டாட்சியரிடம் முறையாக மனு செய்து நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. 7 முதல் 9 வாதிகள் புரல எண்.715/6 டி அவர்களுக்கு சொந்தம் என்பதால் எவ்வித வியாஜியமும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7) புல எண். 715/6 சி யைத்த தவிர்த்து வேறு சொத்துகளுக்கு எனக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்தை 1 முதல் 3 பிரதவிாதிகளும், அவரது தகபப்பானரும்தான் நீண்ட காலமாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. அதனால்தான் அவர்களுக்குள் ஒரு விடுதலை ஆவணம் செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. அந்த விடுதலை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என்று கோருவதற்கு எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

8) வழக்குச் சொதததை நாங்கள் எந்த காலத்திலும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. புல எண். 715ல் சாந்த குமார் என்பவருக்கு நிலம் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. அதனால்தான் அவருடைய ஆவணத்தில் 4 எல்லைகளாக எல்லப்பன் நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிட்டுள்ளார் என்றால்

சரியல்ல. எல்லப்பன் அனுபவம் அனைவருக்கும் தெரியும் என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.